**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 05/2015**

| | | DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|---|---|
| NAME | கணபதி | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 04.02.2026.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. சாட்சி சொல்ல நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்ததா என்றால் இல்லை. சாட்சி சொல்ல யார் நீதிமன்றம் அழைத்து வந்தது என்றால் அஜய்குமார். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி தெரியும் என்றால் ரூபாய் வாங்கும்போது நான் இருந்தேன் அதனால் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் வாதி அஜய் சொல்லி தான் தெரியும் என்றால் சரியல்ல.

2. அஜய் இந்த வழக்கை யாருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் என்றால் கோகிலா என்பவருக்கு எதிராக. கோகிலா ரங்கசமுத்திரத்தை சேர்ந்தவர். இந்த வழக்கில் கோகிலா தவிர மற்றவர்கள் எத்தனை பேர் என்றால் அவரது அக்கா, தங்கை இரண்டு பேர். எந்த தேதியில் எங்கு வைத்து பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் 16.12.2013 குடியாத்தம் ரிஜிஸ்டர் ஆபிசில்.

3. ஒப்பந்தம் எழுத பத்திரத்தை கோகிலம்மா எடுத்து வந்தார். பத்திரத்தை குடியாத்தம் நடராஜன் என்பவரிடம் இருந்து ஒரு நாள் முன்னால் வாங்கினார். ஒப்பந்தம் எழுதுவதற்கு முன்பு கோகிலா மற்றும் அஜய்க்கு என்ன பரிவர்த்தனை நடந்தது என தெரியுமா என்றால் தெரியும். சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் ரங்கசமுத்திரம். சொத்தை நான் பார்த்துள்ளேன். யார் மூலுமாக சொத்தை பார்த்தேன் என்றால் கோகிலம்மா என்னை அழைத்து சென்றார். சொத்தை பார்த்தபோது நான், அஜய் மற்றும் கோகிலம்மா இருந்தோம்.

4. சொத்தை விற்க உள்ளதாக சொல்லி எப்போது நான் அஜயிடம் சொன்னேன் என்றால் கோகிலம்மா ஒரு மாதத்திற்கு முன்பே விற்க உள்ளதாக சொன்னார் நான் அஜயிடம் சொல்லியிருந்தேன். அஜயை எப்படி தெரியும் என்றால் உறவினர் அல்ல எனக்கும் அவருக்கும் கொடுக்கல், வாங்கல் உள்ளது. கொடுக்கல் வாங்கல் என்பது நான் அவரிடம் வட்டிக்கு பணம் வாங்கி திருப்பி கொடுப்பது என்றால் சரிதான். அவருக்கு வட்டிக்கு பணம் கொடுத்து வசூலிப்பது தான் தொழில் என்றால் சரிதான்.

5. எவ்வளவு வட்டிக்கு நான் கடன் வாங்குவேன் என்றால் 10,000/- ரூபாய்க்கு 250/- ரூபாய் வட்டி. கோகிலாவும் அஜயிடம் அதுபோல் கடன் வாங்கி கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரியல்ல கடன் வேண்டாம் சொத்தை விற்பதாக கோகிலா சொன்னார். கோகிலா அவரிடம் கடன் வாங்கி கொடுக்கல் வாங்கல் உள்ளது என்றாலும் அஜய்க்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, விற்பதற்காக பணம் வாங்கினார்.

6. அஜய்க்கு விற்பதற்காக ஒப்பந்தம் போடப்பட்டதாக சொல்லப்படும் இடத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அந்த இடம் நிலமா என்றால் வீடு. காலியிடமும் உள்ளதா என்றால் வீடு மட்டும் உள்ளது. அந்த வீட்டில் கோகிலம்மாள் வசித்து வந்தார் என்றால் ஆமாம். வீடு இருப்பதாக சொல்லும் இடத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3000 சதுரடிக்கு மேல். சொத்தின் ஆவணத்தை நான் பார்த்தேன்.

7. அந்த 3000 சதுரடி சொத்து எத்தனை பேருக்கு பாத்தியப்பட்டது என்றால் மூன்று பேருக்கு. அவர்களது பெயர் தெரியுமா என்றால் ஞாபகமில்லை, அக்கா தங்கைகள். மூன்று பேருக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். அவர்களுக்கு முன்பு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என தெரியுமா என்றால் அவர்களது பூர்வீக சொத்து. பூர்வீக சொத்தை மூன்று பேரும் பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

8. சொத்தை மூன்று பேரும் பொதுவாக அனுபவிப்பதால் மூன்று பேரும் சேர்ந்து விற்றால் தான் செல்லும் என்றால் சரிதான், அவரது பாகத்தை அவர் விற்றார். விற்பனைக்காக போடப்பட்டதாக நான் சொல்லும் ஒப்பந்தத்தை கோகிலா மட்டும் எழுதிகொடுத்தார் என்றால் சரிதான். அஜய்க்கு விற்பனை ஒப்பந்தம் எழுதிகொடுத்த விவரம் கோகிலாவின் சகோதரிகளுக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்களுக்கு நாங்கள் தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான்.

9. அஜய் கடனை வசூல் செய்ய நீதிமன்றத்தில் நிறைய வழக்கு போட்டுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விற்பதற்காக சொத்தின் மதிப்பு 60,000/– என நிர்ணயித்ததாக பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள மதிப்பு மொத்த சொத்துக்கானது என்றால் சரியல்ல, ஒரு பாகத்திற்கானது. 3ல் ஒரு பங்கில் எவ்வளவு அளவிற்கு அந்த தொகை நிர்ணயிக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. எந்த ஆவணத்தின் அடிப்படையில் 60,000/– என நிர்ணயித்தோம் என்றால் ஆவணம் எதுவும் இல்லை அஜய் 60,000/–க்கு தான் வாங்குவேன் என்றார்.

10. கோகிலா அஜயிடம் ரூ.40,000/– கடன் வாங்கி வட்டி 10,000/– த்துடன் சேர்த்து 50,000/–த்தை செலுத்திவிட்டார் என்றாலும் நான் சொல்வதுபோல் விற்பனை ஒப்பந்தம் எதுவும் போடவில்லை என்றால் சரியல்ல. என்னுடன் குடியாத்தத்தை சேர்ந்த ஜெயகாந்தன் என்பவர் சாட்சி கையெழுத்து போட்டார். ஜெயகாந்தன் அஜயின் நண்பர். நான் சொல்வதுபோல் கோகிலா விற்பனை ஒப்பந்தம் எதுவும் எழுதிகொடுக்கவில்லை என்றாலும் அஜய் எனது உறவினர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11. பொதுவாக பாத்தியப்பட்ட பிரிக்கப்படாத கூட்டுகுடும்ப சொத்தை விற்க வேண்டிய அவசியம் கோகிலாவிற்கு இல்லை என்றால் பதிவு அலுவலகத்தில் விற்கலாம் என சொன்னார்கள். பதிவு அலுவலகத்தில் யார் விசாரித்தது என்றால் கோகிலாவே சென்று விசாரித்து வந்து சொன்னார். 10 இலட்சம் மதிப்புள்ள சொத்தை ரூ–60,000/–க்கு விற்க வேண்டிய அவசியம் கோகிலாவிற்கு இல்லை என்றால் அப்போது அவ்வளவு தான் போனது கோகிலா அந்த நிலையில் விற்பனை செய்தார்.

12. கோகிலா கடனை வட்டியோடு திருப்பி செலுத்தியபிறகு அவரது சொத்தை அபகரிக்க வேண்டி வாதி கிரய ஒப்பந்தத்தை மோசடியாக தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கு ஆவணம் பற்றி எதுவும் தெரியாது என்றாலும் வாதி எனது உறவினர் என்பதால் அவருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சாட்சியமும் குறுக்கு விசாரணை சாட்சியமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளதால் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் தவறானவை என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.